
23.10.2014

அனுப்புநர்

எஸ்.பீட்டர் ராஜ் M.A (His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
ஆவே மரியா, அரிசிக்கடை தெரு,
சாத்தான்குளம் - 628 704
தூத்துக்குடி மாவட்டம்



பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர்
சினா வானா பள்ளி வளாகம்
தூத்துக்குடி - 3

அய்யா,

பொருள்: தூத்துக்குடி மாவட்டம் - ரோமன் கத்தோலிக்க பள்ளிகள் நிர்வாகம் - சட்டவிரோதங்கள் - மாவட்ட கல்வி அலுவலகம் உடந்தை - தங்களிடம் கொடுத்த புகார்களுக்கும் நடவடிக்கை இல்லை - அரசு நிதி முறைகேடாகவும் சட்டவிரோதமாகவும் பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது - நடவடிக்கை எடுக்க கோருதல் சார்பாக

பார்வை: 1.பதிவு செய்யப்பட்ட சங்கம் "THE TUTICORIN DIOCESAN ASSOCIATION" S.No.1 of 1937-38 dated 14.04.1937
2.ரிட் மனு எண் 570/1975
3.பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் RC.No.24541-G3/76/dated 20.11.1976

1. பார்வையில் காணும் சங்கம் 14.04.1937ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்கம் மைனாரிட்டி உரிமை பெற்றுள்ளதாகவும் அதன் அடிப்படையில் மேற்படி சங்கம் தூத்துக்குடியில் உள்ள ஆர்.சி.பள்ளிகளை நடத்துவதாகவும் கூறப்படுகிறது. தங்கள் ஆளுகையின்கீழ் 19 பள்ளிகள் செயல்படுகின்றன. மேற்படி சங்கம் மைனாரிட்டி உரிமை பெற்றதற்கான ஆணை இதுவரை யாருக்கும் காட்டப்படவில்லை. சம்மந்தப்பட்ட நிர்வாகத்தினரிடமும் இல்லை. தங்களிடமும் அதற்கான ஆதாரங்கள் இல்லை. மேற்படி பள்ளிகளின் நிர்வாகம் மற்றும் கல்வித்துறை பார்வையில் கண்ட ரிட் மனு மூலம்

மைனாரிட்டி உரிமை பெற்றுள்ளதாக கூறுகின்றன. கிடைத்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் சில உண்மைகள் தெரிய வந்துள்ளன. சென்னை உயர் நீதி மன்றத்தின் 17.12.1975 (W.P 4478/74 etc., Batch) நாளிட்ட ஆணையில் 83, 84ம் பக்கத்தில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. In the other cases, wherever the petitioners' character as minority institutions are not disputed, they are allowed, but with no costs; and the other petitions in which the private institutions are not admitted to be minority institutions, are except for the declaration aforesaid, all dismissed, but with no costs. பல ரிட் மனுக்களை ஒரே தேதியில் Dispose செய்த நீதி மன்ற ஆணையில் மேற்படி ரிட் மனு எண் 88ம் பக்கத்தில் காணப்படுகிறது. அந்த ரிட் மனுவின் மனுதாரர் யார் என்ற விவரம் இல்லை.

2. மேலும் அரசு துணைச் செயலாளர் கடிதம் Memo No.51159/RD2/76/dated 21.06.1976ல் Annexure-Aயில் 570 என்ற எண் மட்டும் காணப்படுகிறது. மேற்கண்ட மெமோவின் அடிப்படையில் பள்ளிக்கல்வி இயக்குனர் அனுப்பிய பார்வை 3ல் கண்ட செயல்முறைகளில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. The clear minority institutions whose writ petitions were allowed (Annexure A and C) by the High Court on the basis that they are minority institutions should not be asked to fulfill the requirements of the Act and rules which are held inapplicable in their cases. மேற்கண்ட இயக்குநரின் செயல்முறைகளிலும் இந்த ரிட் மனு எண் மட்டும் காணப்படுகிறது. நீதிமன்ற ஆணையிலோ, அரசு துணைச் செயலாளர் கடிதத்திலோ, பள்ளிக்கல்வி இயக்குனரின் செயல்முறைகளிலோ அந்த ரிட் மனுவிற்குறிய மனுதாரர் பெயர் காணப்படவில்லை. ரிட் மனு எண் 570/75 என்பது பார்வை 1ல் காண் சங்கத்திற்கானது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. Educational Agencyயின் பெயர் எது என்பது எந்த ஆவணத்திலும் குறிக்கப்படவில்லை.

3. நிர்வாகம் அனுப்பும் பள்ளிகள் சம்மந்தப்பட்ட எந்த ஆணையிலும் மேற்படி பார்வை 1ல் காண் சங்கத்தின் பெயர் / Educational Agency-யின் பெயர் இல்லை.

4. மேலும் கல்வித்துறையிடம் இருந்து நான் இதுவரை பெற்றுள்ள ஆவணங்கள் எதிலும் பார்வை 1ல் காண் சங்கத்தின் பெயர் இல்லை. கல்வித்துறை அனுப்பியிருக்கும் மைனாரிட்டி நிறுவனங்களின் பட்டியல் The Catholic Educational Council of Tamilnadu, Votive Shrine, 63, Halls Road, Kilpauk, Madras – 600 010 என்ற ஒரு தனியார் நிறுவனம் அச்சிட்டது ஆகும். அது அரசின் அதிகாரப்பூர்வமான வெளியீடு அல்ல. மேலும் அதில் கூட

W.P.No. 570 of 1975 என்பது The Roman Catholic Diocese of Tuticorin என்ற நிறுவனத்திற்காக தொடரப்பட்ட வழக்காகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பார்வை 1ல் காண் சங்கத்திற்கானது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

5. நிர்வாகம் கொடுக்கும் அனைத்து ஆணைகள், மற்றும் அங்கீகாரம் / நிதி உதவிக்கு அனுப்பும் ஆனைத்து ஆவணங்களும் கீழ்கண்ட நிறுவனங்களில் ஏதாவது ஒன்றின் பெயரால்தான் கையெழுத்திடப்படுகின்றன.

R.C.Schools, Thoothukudi; R.C.Mission, Thoothukudi; R.C. Church, Thoothukudi; Catholic Diocese of Thoothukudi; Diocese of Thoothukudi

மேற்கண்ட நிறுவனங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று தூத்துக்குடி மாவட்ட பதிவாளர் தனது கடிதம் மூ.மு.எண் 6007/அ3/2013 நாள் 10.12.2013 மூலம் தகவல் தந்துள்ளார். பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் பெயரில் அனுப்பப்படும் அனைத்து ஆவணங்களையும் தாங்கள் ஏற்றுக்கொண்டு பல ஒப்புதல்கள் அளித்துள்ளீர்கள். பெரும்பாலான ஆணைகள் மற்றும் கருத்துருக்கள் R.C.Schools,Thoothukudi என்றுதான் அனுப்பப்படுகின்றன. தாங்களும் எந்த சரிபார்த்தலும் இன்றி ஒப்புதல் அளிக்கிறீர்கள்.

6. நிர்வாகம் தவறு செய்கிறது என்று புகார் செய்தால் ஒரே வரியில் சிறுபான்மைப்பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை என்று பொறுப்பற்ற பதிலைத் தந்துவிடுகிறீர்கள். மாவட்ட ஆட்சியரிடம் திங்கள் மனு கொடுத்து அவர் தங்களை நடவடிக்கை எடுக்கச் சொன்னால்கூட நடவடிக்கை எடுக்காது விட்டு விடுகிறீர்கள். தாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர வேண்டிய சூழல் நிலவுகிறது. ரிட் மனு எண் 9944/2014 அந்த அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கு என்பது தாங்கள் அறிந்த உண்மையாகும். தவறு செய்யும் நிர்வாகத்தைக் காப்பாற்ற எது வேண்டுமானாலும் செய்யத்தயாராக இருக்கிறீர்கள். நிர்வாகம் ஒரு ஆசிரியரின் பணிக்காலத்தை விடுப்பு காலமாக மாற்றச்சொன்னால் (அதுவும் வேறு ஒரு பள்ளியில்) கல்வித்துறைக்கு தனி விதி தாங்களே தயாரித்து ஒப்புதல் அளித்து அதை கடைசி வரை நியாயப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறீர்கள்.

7. மேற்படி நிர்வகத்தின் பெயரையும் பதிவெண்ணையும் தகவலாகக் கேட்டதற்கு தாங்கள் தங்கள் கடிதம் ந.க.எண்.2677/ஆ2/2013 நாள் 15.05.2013ல்

Catholic Educational Council of Tamilnadu (Reg.No.MS.1/1937.38) எனக்குறிப்பிட்டுள்ளீர்கள். அதே கடிதத்தில் மேற்கண்ட நிர்வாகம் தனது பள்ளிகளுக்கு நிலங்களை ஆர்.சி.மிஷன் என்ற பெயரில் பதிவு செய்வதாகக் கூறியுள்ளீர்கள். தங்களது கடிதம் ஓ.மு.எண்.1241ஆ4/14 நாள் 18.03.2014ல் Educational Agencyயின் பெயரை ரோமன் கத்தோலிக்க திருச்சபை எனக்குறிப்பிட்டுள்ளீர்கள். மைனாரிட்டி உரிமை பெற்றதற்கான ஆதாரமாக மேலே பத்தி 2ல் கூறப்பட்டுள்ள கடிதங்களை அனுப்பி நீதிமன்ற ஆணை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

8. எனது 11.02.2014 நாளிட்ட மனுவில் தங்களிடம் தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள 19 பள்ளிகளின் சார்பில் நடைமுறையில் இருக்கும் மேலாளர் மற்றும் கண்காணிப்பாளர்கள் நியமனம், அதிகாரங்கள் மற்றும் அதற்கான ஆவணங்களை தகவலறியும் சட்டத்தின் கீழ் அனுப்பித்தர வேண்டினேன். தாங்கள் தங்கள் கடிதம் ஓ.மு.எண்.1125/ஆ3/14 நாள் 28.02.2014ல் தூத்துக்குடி சின்னக்கோயில் வளாகத்தில் உள்ள ஆர்.சி.பள்ளிகளின் மேலாளரிடம் நான் கேட்ட தகவல்களை அனுப்பி வைக்க வேண்டினீர்கள். தங்களது கடிதம் ஓ.மு.எண்.1573/ஆ3/14 நாள் 11.03.2014-ல் கூட ஆர்.சி.பள்ளிகளின் மேலாளரிடம் நான் கேட்ட தகவல்களை அனுப்பி வைக்க வேண்டியுள்ளீர்கள். இதுவரை எந்த தகவலும் வரவில்லை. எனவே தகவல்கள் இல்லாததாகவே கருதப்படுகிறது. இக்கடிதங்கள் கூட Educational Agency-யின் பெயருக்கு அனுப்பப்படவில்லை.

9. மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் நோக்கினால் தூத்துக்குடியை மையமாக வைத்து செயல்படும் கத்தோலிக்க பள்ளிகளின் பதிவு பெற்ற Educational Agency யின் பெயர், அது மைனாரிட்டி உரிமை பெற்றதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு நிலம், கட்டிடம் ஆகியவற்றிற்கு முறையான சட்டப்பூர்வமான பதிவு இல்லை. பதிவு செய்யப்படாத சம்மந்தமே இல்லாத ஆர்.சி.மிஷன் என்ற பெயருக்கு பதிவு மற்றும் பட்டாவாகியிருக்கிற இடங்கள் சட்டவிரோதமாக பல பள்ளிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அந்த பட்டாக்களில் கோயில்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

10. W.P.No. 570 of 1975 என்ற வழக்கிற்கு மனுதாரர் நீதிமன்றத்தில் கொடுத்துள்ள அதிகாரப்பூர்வமான Affidavit copy யில் மனுதாரர் விவரம் மற்றும் Prayer ஆகியவற்றை பரிசீலனை செய்து சம்மந்தப்பட்ட நிர்வாகம்

பயன்படுத்தும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களான R.C.Schools, Thoothukudi, R.C.Mission, Thoothukudi, Diocese of Thoothukudi, Catholic Diocese of Thoothukudi, The Roman Catholic Diocese of Tuticorin ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து ஒப்பிட்டு மனுதாரர் யார் என ஊர்ஜிதம் செய்து அவர் சரியாக பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளாரா என சரிபார்த்து நீதிமன்றம் அனுமதித்திருக்கும் மைனாரிட்டி உரிமையை சரியான நிறுவனத்திற்கு (Educational Agency) பயன்படுத்துகிறார்களா என்பதை கண்காணித்து அரசு விதிகளின்படி தாங்கள் மேற்படி பள்ளிகளுக்கு அறிவுரை வழங்கவும் ஒப்புதல்கள் அளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள். W.P.No. 570 of 1975 என்ற வழக்கின் Affidavit copy இல்லாமல் மேற்படி நிவாகம் நடத்தும் பள்ளிகளை மைனாரிட்டி உரிமை பெற்றதாகக் கூறி அந்த அடிப்படையில் அரசின் அங்கீகாரமும் நிதி உதவியும் அளித்து வருவது சட்டவிரோதமாகும். தாங்கள் மேற்படி W.P.No. 570 of 1975 என்ற வழக்கின் Affidavit copy-யை சரிபார்த்து Educational Agency-யின் சரியான பெயரை தெரிந்த பிறகுதான் கருத்துருக்களை பரிசீலனை செய்யவேண்டும். மாவட்ட அளவில் உள்ள அலுவலராகிய தங்களுக்கு நான் பல தடவை எழுத்து மூலம் மேற்படி நிர்வாகத்தின் ஊழல்களையும் சட்ட விரோதங்களையும் தெரிவித்த பிறகும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்காது தங்கள் கீழ் உள்ள பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுத்து அரசின் நிதி உதவியை தொடர்ந்து சட்ட விரோதமாக வழங்கி வருகிறீர்கள்.

11. போலியான ஆவணங்களை பயன்படுத்தி பள்ளிகள் நடத்துவதும் அதற்கு கல்வித்துறை உடந்தையாக இருப்பதும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து அரசின் நிதி உதவியை தவறாகப் பயன்படுத்துவதும் சட்டப்படி குற்றமாகும். மேற்படி நிர்வாகம் நடத்தும் பள்ளிகளுக்கு பயன்படுத்தும் நிலம், கட்டிடம் போன்றவற்றிற்கு சட்டப்படியான ஆவணங்கள் இல்லாத சூழ்நிலையில் பயிலும் குழந்தைகளின் உரிமை, கல்வி மற்றும் பாதுகாப்பு நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசின் நிதி இழப்புக்கும் குழந்தைகளின் பாதுகாப்பின்மைக்கும் தாங்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும்.

12. எனவே காலம் தாழ்த்தாது சம்மந்தப்பட்ட நிர்வாகத்தின் மீது ஆவண மற்றும் ஆள் மாறாட்டங்கள் செய்தும் போலி நிறுவனங்கள் பெயரில் நியமனங்கள், மாறுதல்கள் செய்தும் தவறான கருத்துருக்கள் அனுப்பியும்

அரசை ஏமாற்றிய குற்றத்திற்காக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். மேலும் உடனடியாக சம்மந்தப்பட்ட நிர்வாகம் நடத்தும் பள்ளிகளில் அனைத்து ஆவணங்களும் முறையாகவும் சரியாகவும் உள்ளனவா என ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இதுவரை தவறாகப்பெற்ற அரசு மான்யங்களை உடனடியாக கருவூலத்தில் செலுத்த ஆணையிடுமாரு வேண்டுகிறேன்.

என்னிடம் மேற்படி 19 பள்ளிகளை நடத்தும் நிர்வாகம் இதுவரை செய்துள்ள சட்டவிரோதங்கள் அனைத்துக்கும் ஆதாரங்கள் உள்ளன. தாங்கள் செய்துள்ள முறைகேடுகளுக்கும் ஒப்புதல்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன.

இது சம்மந்தமாக கூடுதல் தகவல் தேவை எனில் என்னை தொடர்பு கொள்ள வசதியாக எனது கைபேசி எண்ணை கீழே கொடுக்கின்றேன்.

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

94425 29442

நன்றி.

அன்புடன்,

23/10/2014

S. Peter Raj
AVE MARIA
9, Rice Shop Street, Satankulam,
Thoothukudi District - 628 704.

நகல்: பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் - உரிய நடவடிக்கைக்காக